

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2047 | டிசம்பர் 01, 2016 | புரட்சி 15 | முழக்கம் 46 | விலை: ரூ.3.00

## ‘சொர்க்கம்’ போக ‘ரொக்கம்’ செல்லாது!

நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பு ‘பகவான்’ களையும் நெருக்கடிக்கு உள்ளாக்கிவிட்டது.

கோயில் உண்டியல் காணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதாம்! அவ்வள வும் 500, 1000 நோட்டுகளாம்.

திருப்பதி, பழனி, திரு வரங்கம், திருத்தணி கோயில் களில் உண்டியல் நவீன மய மாக்கப்பட்டுள்ளது, அதற்குப் பெயர் ‘ஈ உண்டியல்’. இனி பக்தர்கள் ரொக்கமாக காணிக்கை செலுத்த முடியாது. டெபிட், கிரடிட் கார்டுகள் வழியாகவே ‘பகவானுக்கு’ காணிக்கை செலுத்த முடியும்.

உண்டியல் காணிக்கை வங்கிக் கணக்குக்கு மாற்றப் பட்டு, பிறகு வங்கியிலிருந்து ‘பகவானுக்கு’ போய்ச் சேரும் போலும். ‘ரொக்கம்’ இல்லாத பணமாற்றத்துக்கு கடவுள்கள் தயார்படுத்தப்படுகிறார்கள்.

சிவன், பெருமாள் உள்ளிட்ட அனைத்து கடவுள் களையும் கறுப்புப் பணத்தையோ, செல்லாத நோட்டுகளையோ போட்டு பக்தர்கள் இனியும் ஏமாற்ற முடியாது.

“கடவுளுக்கே இப்படி கருப்புப் பணத்தை காணிக்கை யாக்குகிறோமே இது தெய்வக் குற்றமாகிவிடுமே” என்ற அச்சம், பயம் எல்லாம் பறந்து போய் வெகு நாளாச்சு! இது குறித்து முகநூலில் பல ‘கிண்டல்’கள் வலம் வருகின்றன. அவற்றில் சில:

“என்கிட்ட இருக்கிற ரெண்டு, மூணு 500 ரூபாய் நோட்டை அட்லாண்டா இந்து கோயில் உண்டியலில் போட்டுருவேன்.

பெருமாள்: எனக்கே விபூதி அடிக்கப் பார்க்கிறல?”

---

ஒருத்தன் கேக்குறான்... “இன்னிக்கு 500, 1000 ரூபாய் நோட்டுகளை திருப்பதி உண்டி யலில் போட்டா, அது பாவத் துல சேருமா... புண்ணியத்துல சேருமா?”

---

“1000 ரூபாய் கொடுத்து அய்ந்து நிமிடத்தில் கடவுளைப் பார்த்தவனையும், அய்ந்து மணி நேரம் கழித்து ‘ஏடிஎம்’மை பார்க்க வைத்த பெருமை மோடியையே சேரும்!”

கடவுள்களை எப்படியெல் லாம் கிண்டலடிக்கிறாங்கய்யா. ‘அய்யோ, இந்து கடவுள்களை அவமதிக்கலாமா?’ என்று ஆகாயத்துக்கும் பூமிக்கும் துள்ளிக் குதிக்கிறவங்க எங்கே போனாங்க? ஓ, நோட்டுகளை வாங்க ஏ.டி.எம். வாசலிலே நிக்குறாங்க போல.

இதுக்காகவாவது மோடியை பாராட்டணும்யா!

– கோடங்குடி மாரிமுத்து

## காவல்துறை தடைகளைத் தகர்த்து

# புலியூரில் ‘மாவீரர் நாள்’





தமிழீழ விடுதலைக்காக ஆயுதப் போராட்டங் களில் வீரச்சாவை தழுவிய வீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் மாவீரர் நாள் நவம்பர் 27 அன்று புலம்பெயர்ந்த நாடுகளில் உணர்வுபூர்வமாக 1989ஆம் ஆண்டு முதல் நிகழ்ந்து வருகிறது.

**1990**ஆம் ஆண்டிலிருந்து மேட்டூர் அருகே உள்ள கொளத்தூர் புலியூர் பிரிவிலும் ‘மாவீரர் நாள்’ நிகழ்வு நடந்து வருகிறது. இந்தியாவில் முதன்முதலாக புலிகள் **1984**லிருந்து **1986** முடிய ஆயுதப் பயிற்சி எடுத்த பகுதி இது என்பது குறிப்பிடத்தக்கது. தோழர் கொளத்தூர் மணி அவர்களுக்கு சொந்தமான இடத்தில் மூன்று ஆண்டுகள் நடந்த இந்த பயிற்சியில்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்கள் பயிற்சி பெற்றார்கள். மேதகு பிரபாகரன், இந்த பயிற்சித் தளத்துக்கு அவ்வப்போது வந்து அறிவுறுத்தல்களை வழங்கி வந்தார். விடுதலைப் புலிகளின் முன்னணி தளபதி பொன்னம்மான், போராளிகளுக்கு பயிற்சிகளை அளித்தார். களத்தில் வீரமரணமடைந்த அவரது நினைவாக அப்பகுதியில் பேருந்து நிறுத்தத்தில் நினைவு நிழற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. புலிகள் பயிற்சி எடுத்த பகுதிக்கு ‘புலியூர்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக புலியூரில் காவல்துறை மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு அனுமதி மறுத்து வருகிறது. உயர்நீதிமன்றம் வழியாக அனுமதி பெற்று நிகழ்வுகள் நடந்து வருகின்றன. இந்த ஆண்டும் இதேபோன்று காவல்துறை அனுமதி மறுத்த நிலையில் உயர்நீதிமன்ற அனுமதியோடு நிகழ்வுகள் நடந்தன. நிகழ்வை ஒழுங்கு செய்த ‘தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒழுங்கிணைப்புக் குழுவுக்காக’ வழக்கறிஞர் திருமூர்த்தி உயர்நீதி மன்றத்தில் வாதாடினார்.

நிகழ்வில் பங்கேற்க தமிழகம் முழுதும் இருந்தும் கழகத் தோழர்களும் உணர்வாளர்களும் குடும்பத்துடன் திரண்டனர். தளபதி பொன்னம்மான் நிழற்கூடத்தில் மாவீரர் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு நீண்ட கியூ வரிசையில் ஏராளமான குழந்தைகள், பெண்கள், தோழர்கள், பொது மக்கள் வரிசையாக காத்திருந்து, மலர் தூவி மெழுகுவர்த்தி ஏற்றி வீரவணக்கம் செலுத்திய காட்சி உணர்ச்சிமயமாக இருந்தது. மாவீரர்களுக்கான ‘வீர வணக்கப் பாடல்’ ஒலிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக முன்னாள் மத்திய அமைச்சரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்பு வழங்கி, விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக குற்றம்சாட்டப்பட்டு, தனது கணவருடன் ஓராண்டு ‘தடா’ சட்டத்தின் கீழ் சிறையில் இருந்த பெருமைக்குரியவருமான சுப்புலட்சுமி ஜெகதீசன் பங்கேற்று நினைவுச் சுடர் ஏற்றி வீரவணக்க நிகழ்வை தொடங்கி வைத்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மலர் தூவி வீரவணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து தோழர்களும் பொது மக்களும் வரிசையில் காத்திருந்து மலர் தூவி, வீரவணக்கம் செலுத்தினர்.



தோழர் செ. வாசுதேவன் தலைமையில் மு.சிவகுமார் முன்னிலையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கொளத்தூர் மணி தனது உரையில், “இந்தியாவிலேயே விடுதலைப் புலிகளின் முதல் பயிற்சிக் களம் இங்குதான் நடந்தது. பல முன்னணித் தலைவர்கள் இங்கே பயிற்சிப் பெற்றார்கள். மூன்றாண்டுகள் நடந்த பயிற்சிக்கு இப்பகுதி மக்கள் பேராதரவு வழங்கினர். சிறப்பு விருந்தினராக வந்துள்ள சுப்புலட்சுமி ஜெகதீசன், பல்வேறு உதவிகளை தொடர்ந்து வழங்கி வந்தார். வாரந்தோறும் **7000** முட்டைகளை தொடர்ந்து அனுப்பினார். இப்போது ஈழத்தில் தமிழ் மக்கள், கடும் இராணுவ ஒடுக்குமுறையின் கீழ் இருந்து வருகிறார்கள். ஈழத் தமிழர்களுக்கு இறையாண்மை கொண்ட அரசியல் தீர்வு நோக்கி பிரச்சினையை முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். தொடர்ந்து அதற்கான கடமை யாற்றுவோம்” என்று குறிப்பிட்டார்.

விடுதலை இராசேந்திரன் தனது உரையில், “புலிகள் பயிற்சி பெற்ற இடத்திலேயே நடக்கும் மாவீரர் நாள் இது ஒன்றுதான். இங்கே பயிற்சி பெற்று, போராட்டக் களம் நோக்கிச் சென்ற பல போராளிகள் ஆயுதப் பயிற்சிகளை மட்டுமல்ல, பெரியார் சிந்தனைகளையும் இங்கிருந்து தமிழ் ஈழத்துக்குக் கொண்டு சென்றனர். போர் நிறுத்தம் வந்த பிறகு, விடுதலைப் புலிகள், கிளிநொச்சியை தலைமையகமாகக் கொண்டு நடத்திய ஆட்சியில் மதச்சார்பின்மை, ஜாதி ஒழிப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதை **2004**ஆம் ஆண்டு அங்கே நான்

(4ஆம் பக்கம்)

## காஞ்சி மக்கள் மன்றத்தில் மாவீரர் நாள்

காஞ்சி மக்கள் மன்றத்தின் பொது வாழ்வக வளாகத்தில் நவம்பர் 26 அன்று மேதகு பிரபாகரன் பிறந்த நாளும் அன்று மாலையிலிருந்து நவம்பர் 27 வரை மாவீரர் நாளும் புரட்சிகர பாடல்கள் கருத்துரைகளுடன் நடைபெற்றன. நவம்பர் 26ஆம் தேதி காலை செங்கொடி நினைவகத்துக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

காலை 8 மணிக்கு புலிக்கொடியை பேராசிரியர் சரசுவதி ஏற்றினார். மாலையில் கலை நிகழ்ச்சி மற்றும் கருத்துரை நிகழ்வுகள் இடம் பெற்றன. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழர் வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், இயக்குனர் களஞ்சியம், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு உள்ளிட்ட பலரும் வீரவணக்க உரையாற்றினர்.

தலையங்கம்

# ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு வீரவணக்கம்!

கியூபாவில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் வழியாக அங்கே நடந்த பாடிஸ்டாவின் சர்வாதிகார ஆட்சியை தூக்கி எறிந்து சோஷலிச ஆட்சியை நிறுவிய ஃபிடல் காஸ்ட்ரோ 90ஆம் வயதில் நவம்பர் 26 அன்று முடிவெய்தினார்.

கூப்பிடும் தூரத்திலுள்ள நாடு அமெரிக்கா. கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள தூரம் 150 கிலோ மீட்டர் தான். ஆனாலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ற அவரை அமெரிக்காவால் வீழ்த்த முடியவில்லை. பொருளாதாரத் தடைகள்; ஆட்சிக் கலைப்பு சதித் திட்டங்கள்; காஸ்ட்ரோவைக் கொல்ல சதி என அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டது அமெரிக்கா. காஸ்ட்ரோவைக் கொல்ல அமெரிக்க உளவு நிறுவனம் 638 முறை சதித் திட்டம் தீட்டி தோற்றதாக செய்திகள் கூறுகின்றன.

'சோஷலிசம் அல்லது மரணம்' என்ற முழக்கத்தை அவர் முன் வைத்தார். அவரது 'சோஷலிசம்' - இனவெறி எதிர்ப்பு, கல்வி வளர்ச்சி, சமூக மேம்பாடு என்ற சமுதாய சமத்துவக் கண்ணோட்டத்தை முதன்மைப் படுத்தியது. இதுவே அவர் முன்மொழிந்த சோஷலிசத்தின் தனித்துவம்.

உயர்கல்வியை மக்களுக்கு அரசு வழங்க வேண்டும் என்பதற்கு முன்னுரிமை தந்து செயல்பட்டார். "நமது புரட்சியால் விளைந்த மிகச் சிறப்பான பயன்களில் ஒன்று நாட்டில் பாலியல் தொழில் செய்யும் பெண்கள்கூட பட்டதாரிகளாக இருப்பது தான்" - என்று பெருமையுடன் கூறினார். கல்வியை முழுமையாக இலவசமாக்கியது கியூபா. உலகிலேயே தலைசிறந்த மருத்துவக் கல்வியை வழங்கி, ஆற்றல் மிக்க மருத்துவர்களை உருவாக்கிய பெருமையும் சின்னஞ்சிறு கியூபாவுக்கு உண்டு. உலகிலேயே இத்தாலிக்கு அடுத்த நிலையில் கியூபாவில்தான் மருத்துவர்கள் அதிகம்.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை சந்தித்த கியூபாவுக்கு உதவிக்கரம் நீட்டிய சோவியத் ஒன்றியம், 1990களில் தகர்ந்தபோது கியூபா மக்கள் உணவின்றி உடல்நலிந்து தவித்த நிலையிலும் கியூபா தன்னைத் தானே சரி செய்து கொள்ளும் வலிமையை பெற்றிருந்தது. அடிப்படைத் தேவைகள் இன்னமும் முழுமை பெறாத நாடாகவே கியூபா இருக்கிறது என்பது உண்மைதான். ஆனாலும், அதன் மனித வளத்தை மேம்படுத்தி, நாட்டின் வளங்களை மக்களுக்குப் பகிர்ந்து கொள்ளும் ஆற்றல் மிக்க இளைய தலைமுறை அங்கே வந்து விட்டது. கியூபா மக்களுக்கு வழங்கிய கல்வி தான் இவை எல்லாவற்றுக்குமே அடிப்படை.

காஸ்ட்ரோ, பிறப்பால் ஸ்பெயின் நாட்டுக்காரர். ஸ்பெயின் மொழி அவரது தாய்மொழி. ஆனால், அவர் இலத்தீன் மொழி பேசும் மக்களுக்காகப் புரட்சியை நடத்தினார். இலத்தீன் மொழி பேசும் இலத்தின் அமெரிக்க நாடுகளின் மதிப்புக்குரிய தலைவராக உயர்ந் தார். மக்களை உண்மையாக நேசிக்கும் புரட்சியாளர்களை, 'மொழி வாதம்' அன்னியர் என்று குறுகிய கூண்டுக்குள் அடைத்துவிட முடியாது என்பதற்கு காஸ்ட்ரோவைவிட வேறு சான்று தேவை இல்லை.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைவிட சமூக வளர்ச்சிக்கு முன்னுரிமை தந்தது அவரது சோஷலிசப் பாதை. இனவெறி அரசியலுக்கு எதிராக அவர் வெகுண்டு எழுந்தார். 25 ஆண்டுகால சிறை வாசத்துக்குப் பிறகு, தென்னாப்பிரிக்க சிறையிலிருந்து விடுதலைப் பெற்ற 'கருப்பின மக்கள்' தலைவர் நெல்சன் மாண்டேலா, தனது தளராத வயதிலும் கியூபாவுக்கு நீண்ட தூரம் பயணித்து காஸ்ட்ரோவுக்கு நன்றி தெரிவிக்க வந்தார். அப்போது மாண்டேலா கூறினார் :

"காஸ்ட்ரோ, கியூபாவிலிருந்து வெகு தூரத்திலுள்ள அங்கோலாவுக்கு தென்னாப்பிரிக்க இன ஒதுக்கலை எதிர்த்துப் போராடிய மக்களுக்காக உங்கள் இராணு வத்தை அனுப்பி வைத்தீர்கள். அதுவே அங்கோலாவின் (இப்போது நமீபியா) விடுதலையை விரைவுபடுத்தியது. அதற்கு நன்றி செலுத்தவே நான் ஆப்பிரிக்காவி லிருந்து வெகுதூரம் கடந்து கியூபா வந்துள்ளேன். நீங்கள் எப்போது எங்கள் தேசத்துக்கு வரப் போகிறீர்கள்?"

தம்மிடம் இருக்கும் குறைந்தபட்ச 'ஆற்றல்'களைக்கூட பாதிக்கப்பட்டவர் களுடன் பகிர்ந்து கொள்வதே காஸ்ட்ரோ வின் சர்வதேசப் பார்வை.

2016ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் தேதி அவர் 'கிரான்மா' இதழுக்கு ஒரு கட்டுரை எழுதினார். அதுவே அவரது கடைசி எழுத்து. மதத்தின் ஆபத்துகளையும் அறிவியல் சிந்தனையின் அவசியத்தையும் வெளிப் படுத்தியது அக்கட்டுரை.

"மதத்தின் கோட்பாடுகள் உலகம் முழுதும் ஒரே தன்மையில்தான் இருக்கின்றன. அமெரிக்காவின் சர்வதேச மனித உரிமைகளுக்கான பிரகடனம், மனசாட்சி, சுதந்திரம், பகுத்தறிவை வலியுறுத்தினாலும் ஒருவரையொருவர் சகித்துக் கொண்டு வாழ வேண்டும் என்ற மதக் கோட்பாட்டையே கூறுகிறது.


அறிவியலும் அதனடிப்படையிலான ஆராய்ச்சிகளும் மனித சமுதாயத்தை வாழ வைத்தாலும் மதங்களையும் மத நம்பிக்கைகளையுமே உலகம் முன்னிறுத்து கிறது. வறட்சியாலும் பல்வேறு காரணங் களாலும் மக்கள் உணவு பற்றாக்குறையில் அவதியுறும்போது அது சொர்க்கத்தில் கிடைக்கும் என்று மதம் கூறுகிறது" என்ற மதங்களின் ஆபத்தான கருத்துகளையே தனது இறுதி கட்டுரையில் அழுத்தமாகக் கண்டித்தார்.

மக்களுக்கான கல்வி, இனங்களின் சமத்துவம், இன ஒடுக்கல் எதிர்ப்பு, மனித நேயம் நிறைந்த சர்வதேசப் பார்வை என்ற தனித் தன்மையே காஸ்ட்ரோவின் மதவாத எதிர்ப்பு தனித்துவம். பெரியாரியத்துடன் அவரது சிந்தனை மிக நெருங்கி இருப்பதை நாம் உணர முடிகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மைத் தலைவர்கள் இதயங்கள் ஒன்றுபோலவே துடிக்கின்றன.

ஆனாலும் நமக்கு ஒரு நெருடல் உண்டு. சிங்கள இன ஒடுக்கலுக்கு எதிராக காஸ்ட்ரோ காட்டிய வழியில் ஆயுதப் போராட்டம் நடத்திய விடுதலைப் புலிகள் மீதும் அதற்கு ஆதரவாக நின்ற மக்கள் மீதும் சிங்கள இராணுவம் இனப் படுகொலையை நடத்தி முடித்தப் பிறகும் அய்.நா.வில் கியூபா சிங்கள அரசின் பக்கமே நின்றது நியாயமா?

2009இல் அய்.நா.வில் இலங்கை 'பயங்கரவாதத்தை' ஒழித்துவிட்டதாகப் பாராட்டி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கியூபாவின் அய்.நா. பிரதிநிதியே வடிவமைத்தது ஏற்கக் கூடியதா? இவற்றை சுட்டிக் காட்டாமல் எப்படி இருக்க முடியும்?

# கடந்து வந்த புரட்சிப் பாதை!



கியூபா மக்களையும் இயற்கையையும் நேசித்த உண்மையான கம்யூனிஸ்ட்டான ஃபிடல் காஸ்ட்ரோ, 90ஆவது வயதில் காலமான செய்தி, சமத்துவம் - சுதந்திரத்தை விரும்பும் உலக மக்களின் இதயத்தில் இடியாக இறங்கியது.

பொருளாதார சமத்துவத்தையும் ஏழைகள் இல்லா கியூபாவையும் உருவாக்கி, அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை மாற்றிட அயராது உழைத்த காஸ்ட்ரோவின் மூச்சு நின்ற செய்தி, அந்நாட்டு மக்களிடையே மட்டுமல்ல... உலக நாடுகள் பலவற்றிலும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

1945இல் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தபோது உயர்கல்வியை முடித்திருந்த காஸ்ட்ரோ, ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். இங்குதான் காஸ்ட்ரோவுக்கு கம்யூனிசத்தின்மேல் அளவற்ற காதல் ஏற்பட்டது. ஹவானா பல்கலைக்கழகம்தான் காஸ்ட்ரோவின் இதயத்தையும் மனதையும் திறந்து அவரை ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் ஆக்கியது. அதே பல்கலைக் கழகத்தில் ஒரு சில மாணவர்கள் ஒரு வேளை உணவுக்குக் கஷ்டப்படும்போது, வேறு சிலரோ சுகபோகத்தில் திளைத்திருப்பதைக் கண்டு மனம் வெதும்பினார். அமெரிக்க நிறுவனங்களின் ஆக்கிரமிப்புக் குறித்து அப்போதைய அதிபரான பாடிஸ்டாவிடம் அவர் கூறிய புகார், குப்பைக்குச் சென்றது. அப்போதுதான் அமெரிக்காவின் கைக்கூலி அதிபர் பாடிஸ்டா என்பதை அறிந்து, 'உடனடியாக அந்த ஆட்சியைக் கலைத்துவிட்டு உண்மையான மக்களுக்கான ஆட்சியைக் கொண்டு வரவேண்டும்' என்று திட்டம் தீட்டினார்.

கியூபாவின் முக்கிய இராணுவ முகாமான மொன்காடாத்தைத் தாக்க தனது நண்பர்களுடன் சேர்ந்து திட்டம் வகுத்து, 1953 ஜூலை 26இல் இரவில் குழுக்களாகப் பிரிந்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார் காஸ்ட்ரோ. ஆனால், அந்த முயற்சியின்போது எதிரிகளிடம் மாட்டிக் கொண்டார். கியூபா நாட்டின் இயற்கை வளங்களைக் கொள்ளை அடிக்க அமெரிக்காவுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் பாடிஸ்டாவின் ஆட்சியை விரட்டி அடிக்கவே தாம் திட்டம் தீட்டியதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார். அப்போது அவர் ஆற்றிய உரையே "வரலாறு என்னை விடுதலை செய்யும்" என்ற புகழ் பெற்ற உரை. இதைக்கேட்ட நீதிபதிகள் வாயடைத்துப் போனார்கள். சிறையில் இருந்து 1955 மே 15இல் காஸ்ட்ரோ விடுதலை செய்யப்பட்டார்.

சிறைக்குள்ளே கியூபாவின் சுதந்திரம் குறித்து திட்டமிட்ட காஸ்ட்ரோ, சிறையில் இருந்து வெளியே வந்ததும் மெக்சிகோ சென்று சே குவேராவை சந்தித்தார். பின்னர் இருவரும் இணைந்து கியூபா விடுதலைக்காக இரட்டைக் குழல் துப்பாக்கிகளாகப் போராடினார்கள். சே குவேரா உதவியுடன் மக்களையும் விடுதலைப் போரில் பங்கேற்க வழி செய்தார் காஸ்ட்ரோ.

காஸ்ட்ரோ ஆட்சியைக் கைப்பற்றியபோது, கியூபா மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தது. காஸ்ட்ரோ பதவியேற்றது முதல், தனக்கு நெருக்கமாக இருக்கும், கம்யூனிசத்தில் ஈடுபாடு கொண்ட பொருளாதாரப் பேராசிரியர்களுடன் ஆலோசனை நடத்தி, பொருளாதாரம் குறித்து முடிவு செய்தார். தன்னைக் கிண்டல் செய்த அமெரிக்காவைக் கண்டு அஞ்சாமல், கியூபாவில் உள்ள அமெரிக்க நிறுவனங்களை அரசே கைப்பற்ற வழிவகுத்தார். பல்வேறு துறைகளிலும், கல்வியறிவிலும் கியூபா முன்னேற்றத்தைக் கண்டது.

ஃபிடலை ஒழித்தால் கியூபாவை அழித்துவிடலாம் என்று கணக்கு போட்ட அமெரிக்கா, காஸ்ட்ரோவை கொலை செய்ய மேற்கொண்ட நூற்றுக்கணக்கான முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. ஃபிடலின் காதலி மூலம் கொலை செய்யத் திட்டமிட்டதும் அம்பலமானது. அவரது காதலி அதனை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டார்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, கடந்த ஆண்டு கியூபாவுக்கு மேற்கொண்ட பயணம் உலக வரலாற்றில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

2006ஆம் ஆண்டு ஜூலையில் செரிமான பிரச்சினைக்காக அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட ஃபிடல், 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 19இல் பதவி விலகுவதாக அறிவித்தார்.

உடல்நலக்குறைவால், நவம்பர் 26ஆம் தேதி மரணம் அடைந்த ஃபிடல் காஸ்ட்ரோவின் இறுதி நிகழ்வு டிசம்பர் 4ஆம் தேதி கியூபாவில் நடைபெறவுள்ளது. உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வு, கியூபாவை தன்னிறைவு எட்ட வைத்த, ஒரு மாபெரும் வீரனின் பெருமையைப் பறைசாற்றும் தினமாக அமையும்.

– 'ஜூவி' கட்டுரை

# ‘ரூபாய் நோட்டு’ அறிவிப்பின் அரசியல் பின்னணி என்ன?

**500,** 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற பிரதமர் மோடியின் அதிரடி அறிவிப்புக்குப் பின்னணியில் உள்ள அரசியல் குறித்து பல்வேறு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த அறிவிப்பு வரப்போகிறது என்ற தகவல் முன்கூட்டியே கசிந்திருக்கிறது என்றும், அதன் காரணமாகவே மோடி அறிவிப்புக்கு சில மணி நேரத்துக்கு முன்பு, கல்கத்தாவில் பா.ஜ.க. 500, 1000 ரூபாய் நோட்டுகளை ஒரு வங்கியில் ரூ.1 கோடிக்கு டெபாசிட் செய்ததையும் சீத்தாராம் யெச்சூரி மாநிலங்களவையில் ஆதாரங்களுடன் குற்றம் சாட்டினார்.

மேற்கு வங்க பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் பவானி சிங், இந்த அறிவிப்பு வரப்போகும் தகவல் முன்கூட்டியே அம்பானி, அதானி தொழில் நிறுவனங்களுக்கு தரப்பட்டுள்ளது என்று பேட்டி அளித்திருக்கிறார். கடந்த 3 மாதங்களாக வங்கிகளில் செலுத்தப்பட்ட ‘டெப்பாசிட்’ தொகை பல மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த சந்தேக சூழலில் மோடி மீதே கருப்புப் பண குற்றச்சாட்டுகளும் ஆதாரங்களுடன் வெளி வந்திருக்கின்றன. மோடி மீதான கருப்புப் பண குற்றச்சாட்டுக்கான ஆவணங்கள் மத்திய புலனாய்வுத் துறை, மத்திய நேரடி வரி வாரியம், ஊழல் கண்காணிப்பு ஆணையம், கருப்புப் பணத்துக்கான சிறப்பு புலனாய்வுக் குழு ஆகிய அமைப்புகளிடமும் இருக்கின்றன. இந்த அமைப்புகள் அரசியல் சட்ட அங்கீகாரம் பெற்றவையாகும். மோடி ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பை வெளியிடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு இந்த ஆவணங்கள் மேற்குறிப்பிட்ட அமைப்புகளிடம் வந்துள்ளன. உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள், நீதிபதிகள் உள்ளிட்ட மேல்மட்ட ஊழல்களைத் தொடர்ந்து துணிவுடன் எதிர்த்து போராடி வரும் சமூக ஆர்வலர் பிரசாந்த் பூஷன், இந்தத் தகவல்களை உரிய ஆதாரங்களுடன் உச்சநீதி மன்றத்தில் அக்டோபர் 25, 2016இல் வழக்கு மனுவாக தாக்கல் செய்துள்ளார். அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் அதிர்ச்சியூட்டக் கூடியவை.

‘சகாரா’ பெரும் தொழில் குழுமத்தில் வருமான வரித் துறை, 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடத்திய சோதனையில் இந்த நிறுவனம் அரசியல் தலைவர்களுக்கு கொடுத்த நன்கொடை பற்றிய விவரங்கள் அடங்கிய ‘நாட்குறிப்பு’ கைப்பற்றப்பட்டது. 2013 அக்.30 முதல் 2014 பிப்.21 வரையிலான ‘நன்கொடை’ தகவல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. அதில் குஜராத் முதலமைச்சர் ‘மோடிஜி’ பெயரும் இடம் பெற்றுள்ளது. வருமான வரித் துறை இது குறித்து ஒரு மதிப்பீடு அறிக்கையையும் (Apprisal Report) எழுத்துபூர்வமாக பதிவு செய்திருக்கிறது. ‘மோடிஜி’க்கு அகமதாபாத்தில் ‘ஜெய்ஸ்வால்ஜி’ என்பவர் வழியாக எட்டு தவணைகளில் பணம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.40.10 கோடி. இது குறித்த விசாரணை நடந்து வருகிறது” என்று வருமான வரித்துறையின் அறிக்கை கூறுகிறது. குஜராத் முதல்வராக இருந்த மோடி, பிரதமர் பதவிக்கு தன்னை வேட்பாளராக்கிக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டிருந்த காலம் அது என்பது குறிப்பிடத்தக்கது.

சகாரா குழுமத்தில் கைப்பற்றப்பட்ட அந்த நாட்குறிப்பில், ‘ம.பி. முதல்வர்’, ‘சத்தீஸ்கர் முதல்வர்’, ‘டெல்லி முதல்வர்’ ஆகியோருக்கு பணம் தரப்பட்ட பதிவுகளும் இடம் பெற்றுள்ளன.

அதேபோல் 2013ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், ‘ஆதித்யா பிர்லா’ தொழில் குழுமத்தில் நடத்தப்பட்ட வருமானவரி சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணத்தில் ‘சி.எம். குஜராத்’துக்கு ரூ.25 கோடி வழங்கப்பட்டதாக பதிவாகியிருந்தது. இந்த ஆவணங்களைக் கைப்பற்றிய வருமான வரி அதிகாரிகள், இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டனர். பிர்லா குழும அதிகாரி ஒருவர், ‘குஜராத் சி.எம்.’ என்று குறிப்பிட்டிருப்பது, ‘குஜராத் அல்கலீஸ் மற்றும் கெமிக்கல்ஸ்’ என்ற நிறுவனத்தையே குறிக்கிறது என்று ஒரு விளக்கத்தை வருமான வரித் துறைக்கு அளித்தார். பிர்லா குழுமம் இப்படி ஒரு ‘விளக்கம்’ தந்தாலும், ‘சகாரா’ நிறுவனம் ‘மோடிஜி’க்கு நன்கொடை வழங்கியது குறித்து எந்த மறுப்பையும் தரவில்லை.

தனது மனுவில், இந்த விவரங்களைக் குறிப்பிட்டுள்ள பிரசாந்த் பூஷன், “எப்படி இருந்தாலும் வருமான வரித் துறையோ, மத்திய புலனாய்வுத் துறையோ இதில் சட்டபூர்வமாக மேற்கொள்ள வேண்டிய உருப்படியான நடவடிக்கைகளை தொடரவில்லை. இவை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகும். இந்த நிலையில் இந்த ‘பணம் பெற்றது’ தொடர்பான புகாரை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பில் இருந்த வருமானவரித் துறை அதிகாரி கே.பி. சவுத்ரி, 2015 ஜூன் மாதத்தில் இலஞ்ச ஒழிப்புத் துறையின் தலைவர் என்ற பெரிய பதவியில் நியமிக்கப்பட்டார். ‘இந்த நியமனம் சட்ட விரோதமானது’ என்று பூஷன் இந்த நியமனத்தை எதிர்த்துள்ளார். அந்த நியமனத்தை நீக்கம் செய்ய கோரியுள்ளார்.

அக்டோபர் 25, 2016இல் பூஷன் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் வருமானவரித் துறை தீர்ப்பாயத்துக்கு சட்டபடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி நவம்பர் 8, 2016 அன்று மீண்டும் கடிதம் எழுதினார். சகாரா குழுமத்தில் கைப்பற்றப்பட்ட நாட்குறிப்பில் அடங்கியுள்ள தகவல்கள் சாதாரணமானவை அல்ல; அதை குறைத்து மதிப்பிட்டு மூடி மறைத்துவிடக் கூடாது என்று அந்த கடிதத்தில் வலியுறுத்தி இருந்தார். பூஷன் கடிதம் எழுதிய அந்த நவம்பர் 8ஆம் தேதி இரவுதான் மோடியின் ‘நோட்டுகள் செல்லாது’ என்ற அதிரடியான அறிவிப்பு வந்தது.

அக்டோபர் 25ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவும் அதன் தொடர்ச்சியாக நவம்பர் 8ஆம் தேதி தீர்ப்பாயத்துக்கு எழுதிய கடிதமும் நிதித் துறை அமைச்சகத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகுதான் மேல்மட்ட அதிகாரிகள் அவசர ஆலோசனைக்குப் பிறகு மோடியின் அறிவிப்பு வெளியானது என்று பிரசாந்த் பூஷன் குற்றம் சாட்டுகிறார். (ஆதாரம்: ‘பிரன்ட்லைன்’ டிசம்பர் 8, 2016)

மோடியின் மீதான இந்த குற்றச்சாட்டுகளை டெல்லி சட்டமன்றத்தில் முதல்வர் கெஜ்ரிவால் பேசியிருக்கிறார். ‘இந்து’ ஆங்கில நாளேட்டைத் தவிர, வேறு எந்த ஏடும் (‘தமிழ் இந்து’ உள்பட) இந்த செய்தியை வெளியிடவில்லை.

## சென்னையில் காஸ்ட்ரோ – மாவீரர்களுக்கு வீர வணக்கம்!

நவம்பர் 27 மாவீரர் நாளில், கியூபா புரட்சியாளர் ஃபிடல் காஸ்ட்ரோ நவம்.26இல் முடிவெய்தினார். சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மயிலாப்பூர் செயின்மேரீஸ் பாலம் அருகே காஸ்ட்ரோவுக்கும் ஈழத்தின் மாவீரர்களுக்கும் வீரவணக்கம் செலுத்தினர். நிகழ்வில் ஜான் மண்டேலா, வடசென்னை மாவட்டத் தலைவர் ஏசுகுமார், மயிலாப்பூர் மற்றும் இராயப்பேட்டைப் பகுதியைச் சார்ந்த 40 கழகத் தோழர்கள் பங்கேற்று, மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர்.

## ‘அன்னக் காவடி’ ஆனாலும்...



பகுத்தறிவு சிந்தனைகளை திரைப்படங்கள் வழியாக பரப்புவதை தனது இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன். தன்னுடைய பணத்தையும் செல்வத்தையும் மக்களுக்கு வாரி வாரி வழங்கிய வள்ளல்.

பெரியார், கலைவாணர் தொண்டு குறித்து இவ்வாறு எழுதினார்:

“இனி என்.எஸ். கிருஷ்ணன் செத்தாலும் சரி, அவர் பணம் காசெல்லாம் நழுவி ‘அன்னக் காவடி கிருஷ்ணன்’ ஆனாலும் சரி, நாடகப் புரட்சி உலகைப் பற்றி சரித்திரம் எழுதப்பட்டால், அட்டைப் பக்கத்தில் கிருஷ்ணன் படம் போடாவிட்டால், அச்சரித்திரமே தீண்டப்படாததாக ஆகிவிடும். (‘குடிஅரசு’ 11.11.1944)

கலைவாணர், பெரியார் பற்றி இவ்வாறு கூறினார்:

“நம் நாட்டைப் பொறுத்தவரையில் செயற்கரிய செய்த பெரியவர்கள் பலர். அவர்களின் வரிசையிலே இடம் பெறத்தக்க ஒரு பெரியார் நமது தலைமுறையில் வாழ்ந்து கொண்டிருப்பது குறித்து நாம் பெருமை கொள்ளலாம். சிந்திப்பதே பாவம் – என்று எளியோரை வலியோர் அர்த்தமில்லாமல் வேத, புராண, இதிகாசங்கள் மூலமாக அடக்கி வருகின்றனர் என்று கருதப்படும் சூழ்ச்சியை இரகசியமாகவோ, தந்திரமாகவோ அல்லாமல் வெளிப்படையாக எதிர்க்கும் யாவரும் சிந்திக்கலாம் என்கிற புதிய பொது நிலையை உண்டு பண்ணி வைத்த ஒரே ஒரு பெரியார் நமது ஈ.வெ.ரா. அவர்கள்தான். பெரியாரை வாழ்த்தாத தமிழன் இருக்க மாட்டான். பெரியாரால் வாழ்த்துப் பெறாத தமிழனும் இருக்க முடியாது.

தமிழகம் பெற்றிருக்கும் பொதுச் செல்வங்களில் அவரும் ஒருவர் – பூப்போன்ற நெஞ்சமுள்ளார் – புகழுக்காகத் தம்போக்கை மாற்றிக் கொள்ள மாட்டார். அவருக்காக வேண்டுமானால் புகழ் தனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். புனிதமான மனிதர். ‘துணிவு’ என்னும் மூன்றெழுத்து முத்தமிழ்ப் பண்பை மனித உருவில் காண வேண்டுமாயின் அந்த உருவம் ஈ.வெ.ரா. தான். காரணம் வேறு எதுவுமில்லை. அவரது உண்மையில், உயர்ந்த பண்பில், ஒழுக்கத்தில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை.

இராஜதந்திரிகளையும் கவரும் அளவுக்குப் பொல்லாத அரசியல் மேதை. புரிய முடியாத பெரிய மூளை. பொறுமைமிகும் தலைவர். சுருங்கக் கூற வேண்டுமாயின், தமிழ் இனத்தின் மெய்யான தந்தை. இன்று அன்னாரது பிறந்த தினவிழாவைப் பெருமிதத் துடன் கொண்டாடுகிறோம். வாழ்க பெரியார். ஏனெனில், தமிழனும், அறிவும் இன்னும் எவ்வளவோ வளர வேண்டியிருக்கிறது.” (‘விடுதலை’ 17.9.1959)

1939இல் வெளிவந்த படம் ‘மாணிக்கவாசகர்’. அப்படத்தில் அரண்மனை நிர்வாகியாக நடித்தார் கலைவாணர். மன்னரின் ஆட்சி புரோகிதரின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டதாக இருந்தது. ஒரு காட்சியில் கலைவாணர் – புரோகிதப் பார்ப்பனரைப் பார்த்து கூறுவார்:

“இதோ பார், இது என்ன தெரியுமா? பேனா. தர்ப்பைப்புல் அல்ல. தொலைச்சுடுவேன் தொலைச்சு” – திரைப்படத்தில் துணிவுடன் புகுத்திய இந்தக் காட்சியைப் பார்த்த அண்ணா, பெரியாரிடம் எடுத்துக் கூற, மகிழ்ச்சி அடைந்த பெரியார், கலைவாணரை நேரில் அழைத்து பாராட்டினார்.

மற்றொரு நிகழ்வு. தமிழ்த் திரையுலகில் தனது இசையால் நடிப்பால் இரசிகர்களைக் கட்டிப் போட்டவர் எம்.கே.தியாகராஜ பாகவதர். கலைவாணரின் நெருங்கிய நண்பர். தனது புதிய இல்லத் திறப்பு விழாவுக்கு அக்காலத்தில் ‘கதாகாலட்சேபத்தில்’ (பாடல், உரையாடல் வழியாக கதை சொல்லும் கலை) பிரபலமாக இருந்த சேங்காலிபுரம் அனந்தராமர் தீட்சரை காலட்சேபம் செய்ய பாகவதர் அழைத்தார். “நந்தனார் காலட்சேபத்தை” அவர் மூலம் நடத்த விரும்பினார் பாகவதர். பார்ப்பன தீட்சதர் மறுத்து விட்டார். “கோவில் நிகழ்ச்சிகளுக்கும் ‘பிராமணாள்’ ஆத்து விசேஷங்களுக்கு மட்டுமே நான் போவேன்” என்றார் தீட்சதர். கலைவாணரிடம் இதை பாகவதர் வேதனையோடு தெரிவித்தார். ‘கவலையை விடுங்க; அதே நந்தனார் காலட்சேபத்தை நான் நடத்துகிறேன்’ என்று கூறிய கலைவாணர், கவிஞர் உடுமலை நாராயணகவியுடன் கலந்து ‘கிந்தனார்’ கதைப் பாடலை உருவாக்கி, பாகவதர் இல்லத் திறப்பு விழாவில் நடத்தினார். தீண்டாமை, ஜாதிக் கொடுமைகளை மிகச் சிறப்பாக விளக்கிய அந்த நிகழ்ச்சி, பிறகு நல்லதம்பி திரைப்படத்திலும் காட்சியாக சேர்க்கப்பட்டது. (இத் தகவலை பதிவு செய்தவர் கலைவாணரின் மகன் பொறியாளர் கே. நல்லதம்பி)

பொதுவுடைமைக்காரரும் நாத்திகருமான நடிகர் சார்லி சாப்ளினுக்கு இலண்டன் நகரத்தில் சிலை கம்பீரமாக நிற்கிறது. கலைவாணருக்கு தலைநகரில் சிலை நிறுவப்பட்டிருக்கிறது.

**(கலைவாணரின் பிறந்த நாள் நவம்பர் 29)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மத்திய அரசுப் பணிகளில் தமிழர்களின் வேலை வாய்ப்பு உரிமைகள் பறிப்பு

"முஜே தமில் நஹி மாலும், இந்தி மே போலோ" (எனக்கு தமிழ் தெரியாது, இந்தியில் சொல்). இன்று தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள், இரயில்வே பயணச் சீட்டு பெறும் இடங்கள், வாழ்நாள் காப்பீடு, பொதுக் காப்பீடு மற்றும் பொதுத் துறை வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களிடம் தமிழர்கள் இவ்வார்த்தைகளை எதிர் கொள்கிறார்கள். டெல்லி அரசுகளின் கயமைத்தனத்தினால், சூழ்ச்சியினால் கடந்த பத்தாண்டுகளாக தமிழகத்தில் இயங்கும் மத்திய அரசுத்துறைகளில் தமிழர்களுக்கான வேலை வாய்ப்புரிமை தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது.

இது சேவைத்துறைகளில் மட்டுமல்லாது தமிழகத்தில் செயல்படும் மத்திய அரசின் தொழிற்துறைகளான (Factories & Enterprises) என்.எல்.சி (NLC), ஓ.என்.ஜி.சி (ONGC), பி.எச்.இ.எல் (BHEL), துப்பாக்கி தொழிற்சாலை, டாங்கி தொழிற்சாலை, இராணுவ உடை தயாரிப்பகம், (Defence Factories) இணைப்பு பெட்டி தொழிற்சாலை, கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகிய தொழிற்சாலைகளில் இந்த நிலைதான்.

மத்திய அரசு அலுவலகங்கள், தொழிற்சாலைகள், பொதுத்துறை நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், வங்கிகளில் அதிகாரிகள் அளவிலான பணி நியமனங்களுக்கு அகில இந்திய அளவில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேர்வுகளில் முதற்கட்ட அப்ஜெக்டிவ் (objective) வினாத்தாள்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் இருக்கிறது. இரண்டாம் கட்ட எழுத்துமுறை தேர்வுகளை (Descriptive) இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதலாம் என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நேர்முகத்தேர்வுகளும் (Interview) டெல்லியில் மையமிட்டு நடத்தப்பட்டு, நேர்முகத்தேர்வுகளை நடத்தி மதிப்பெண் அளிப்பவர்கள் பெரும்பாலும் வட மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருப்பதால் இந்தி பேசுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தமிழகத்தை சேர்ந்தவர்கள் பின்னுக்கு தள்ளப்படுகிறார்கள். இலட்சங்களில் மாத ஊதியம் பெறும், இவ்வாறு தேர்வு செய்யப்படும் அதிகாரிகளே எதிர்காலத்தில் அந்த நிறுவனங்களுக்கு தலைமைப் பொறுப்புகளுக்கு வருகிறார்கள், இவ்வாறு தலைமைப் பொறுப்புகளுக்கு தமிழகத்தை சேர்ந்தவர்களை வரவிடாமல் தடுப்பதற்கான டெல்லியின் சூழ்ச்சியினால் இப்பணியிடங்களுக்கு தமிழர்கள் ஒருவர் கூட நியமிக்கப்படுவதில்லை

இதே நிலைதான் அதிகாரிகள் அல்லாத பணியாளர் அளவிலான தேர்வுகளுக்கும்.

பணியாளர் அளவிலான தேர்வுகள் மாநில அளவிலோ அல்லது மண்டல அளவிலோ நடத்தப்படவேண்டும் என்று பல ஆணைகள், தீர்ப்புகள் உள்ளன. ஆனால் இவை எல்லாம் காற்றில் விடப்பட்டு, படிப்படியாக

**இந்தி பேசும் வேற்று மாநிலத்தை சேர்ந்தவர்கள் தமிழகத்தில் பெருவாரியாக பணியாற்றி வருகிறார்கள்.**

தளர்த்தப்பட்டு மத்திய அரசின் ஆதிக்கப் போக்கினால் இப்பணிகளும் அகில இந்திய அளவில் நடத்தப்படுகின்றன.

உதாரணத்திற்கு 2006 ஆண்டுவரை மத்திய பணியாளர் தேர்வாணையம் மண்டல அளவிலேயே தேர்வுகளை நடத்தி வந்தது, தபால் துறை தபால் உதவியாளர் பணியிடங்களுக்கு 2014 வரை மாநில அளவில் நடத்தி வந்தது. அப்போது இத்தேர்வுகளில் அப்ஜெக்டிவ் (objective) மற்றும் நேர்முகத்தேர்வு (Interview) மூலமாக இரண்டு கட்ட நிலைகளில் பணி நியமனச் சேர்க்கை நடைபெற்று வந்தன. இதனால் அந்தந்த மாநில மக்களுக்கான வேலை வாய்ப்புகள் மத்திய அரசு நிறுவனங்களில் கிடைத்து வந்தது.

பின்னர் இவை அகில இந்திய அளவிலான தேர்வுகளாக மாற்றப்பட்டு இத்தேர்வுகளில் இந்தி பேசுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக சூழ்ச்சிகள் செய்யப்பட்டு எழுத்துமுறை (Descriptive) வினாத்தாள்கள் இந்தியில் நுழைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அப்ஜெக்டிவ் (objective) வினாத்தாள்களும் ஆங்கிலத்துடன் இந்தியிலும் இருப்பதால், இந்தியைத் தாய்மொழியாக கொண்டவர்களுக்கு, வினாக்களை எளிதில் புரிந்து கொண்டு விடையளிப்பது மிகவும் எளிதாக இருக்கிறது. மற்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே விடையளிக்க வாய்ப்புகளை இந்திய அரசு ஏற்படுத்தித் தந்து இந்தி பேசும் மக்களுக்கு சாதகமாக நடந்துகொள்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்டுகிறோம். மிக உயரிய முதல்நிலை IAS, IPS பணியிடங்களுக்கு தேர்வுகளை நடத்தும் UPSC கூட தேர்வுகளைத் தமிழில் நடத்துகிறது. ஆனால் மக்களிடையே நேரடியாக தொடர்பு கொண்டு களத்தில் பணியாற்றும் இப்பணியிடங்களுக்கு நாம் பலமுறை வலியுறுத்தியும் இந்திய அரசானது தமிழில் தேர்வுகளை நடத்த மறுக்கிறது என்பது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.


இவ்வாறு இந்தி பேசும் வேற்று மாநிலத்தை சேர்ந்தவர்கள் தமிழகத்தில் சிறு நகரங்களுக்கும், மாவட்ட தலைநகரங்களுக்கும் பணியமர்த்தப்பட்டு பெருவாரியாக பணியாற்றி வருகிறார்கள். இதனால் தமிழகத்தில் இயங்கும் மத்திய அரசின் சேவைகளைப் பெறவேண்டுமானால் அங்கு பணியாற்றும் இந்தி மட்டுமே தெரிந்த வேற்று மாநிலப் பணியாளர்களிடம், இந்தி தெரிந்தால் மட்டுமே சென்று அவர்களின் சேவையை பெற முடியும் என்ற நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் இவ்வாறு இந்தி பேசும் பணியாளர்களை வைத்துக் கொண்டு நிர்வாகத்தை நடத்துவதிலும் தமிழகத்தில் உள்ள மத்திய அரசின் நிறுவனங்கள் பல சிக்கல்களை சந்திக்கின்றன. வேற்று மாநிலத்தில் இருந்து பணியாற்ற வரும் ஊழியர்கள் மீண்டும் தமது மாநிலத்திற்கே செல்ல பணியிட மாற்ற விண்ணப்பம் செய்து, அப்பணியிட மாற்றத்திலேயே குறியாக இருப்பதால் இம்மாநிலத்தில் உள்ள பணிகளில் சுணக்கம் காட்டுகின்றனர். பணியிட மாற்றம் கிடைத்த பின்பு காலியாகும் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவது இல்லை அவ்வாறு நிரப்பப்பட்டாலும் அதிலும் இந்தி பேசுபவர்களே மீண்டும் வருகிறார்கள். இவற்றைக் களையக்கோரி சம்பந்தப்பட்ட மத்திய அரசின் தலைமை நிர்வாகிகளும், தொழிற்சங்கங்களும் பலமுறை இந்திய அரசிற்கு கோரிக்கை வைத்தும் இவை காது கேளாதார் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது.

மத்திய அரசு பணியிடங்களில் தேவைக்கேற்ப மண்டல அளவிலோ அல்லது மாநில அளவிலோ பணியிடங்களை நிரப்பிக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இருந்தும் (Radheshyaam Vs Union of India) மத்திய அரசானது தான் தோன்றித்தனமாக வடவர்களை பணிகளில் திணிப்பதையே கருத்தாக கொண்டுள்ளது.தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளை தமிழர்களுக்கு மறுக்கும் இந்த ஆபத்தான போக்குகளை தடுத்து நிறுத்த வேண்டியது அவசரம்; அவசியம்.

– **நமது செய்தியாளர்**

# 'சமூக நீதி'க்கு புகழ் சேர்க்கும் இணையர்



மத்திய தேர்வாணையம் நடத்திய 2015ஆம் ஆண்டுக்கான அய்.ஏ.எஸ். தேர்வில் முதலிடம் பெற்று முதல் முயற்சியிலேயே சாதனைப் படைத்தவர் ஒரு தலித் மாணவி. 22 வயதே நிரம்பிய அவரது பெயர் தினாதபி. இவருக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் தேர்ச்சிப் பெற்றவர் ஒரு இஸ்லாமிய மாணவர். அவரது பெயர் அதார் அமிர்-உல்-ஷஃபிகான். இருவரும் முசோரியில் உள்ள தேசிய பயிற்சி அகாடமியில் இப்போது பயிற்சிப் பெற்று வருகிறார்கள். புதுடில்லி தலைமைச் செயலகம் அமைந்துள்ள 'சவுத் பிளாக்கில்' இருவரும் முதன்முதலாக சந்தித்தார்கள். அவர்களுக்கிடையே காதல் மலர்ந்தது. தங்கள் காதலை முகநூலில் வெளிப்படையாகவே பதிவு செய்து வருகிறார்கள். இருவர் வீட்டின் பெற்றோரும் திருமணத்துக்கு ஒப்புதல் வழங்கிவிட்டனர். விரைவில் திருமணம் நடக்க இருக்கிறது.

தினாதபி இது பற்றி கூறுகையில், "நான் சுதந்திர உணர்வு கொண்ட ஒரு பெண். நான் விரும்பிய கணவரை தேர்வு செய்துள்ளேன். ஆனால், நான் வேறு மதக்காரரை திருமணம் செய்து கொண்டதற்காக முகநூலில் மிக மோசமாக சிலர் எழுதுகிறார்கள். இடஒதுக்கீட்டுக்கு எதிராகவும் எழுதுகிறார்கள். அது குறித்து நான் கவலைப்படவில்லை. இன்னும் நான் வெகுதூரம் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு தலித் என்பதால் அந்த ஜாதியோடு இணைந்திருக்கும் சமூகப் பார்வையை தகர்த்து, நான் மக்களின் சமூக மேம்பாட்டுக்காக பாடுபடுவேன்" என்று கூறியுள்ளார்.

'தகுதி திறமை'க்கு சொந்தம் கொண்டாடும் பார்ப்பனியத்தின் பொய்மையை கிழித்துக் காட்டி, ஜாதி, மத மறுப்பு மணவிழா காணும் இணையர்களை நாமும் வாழ்த்துவோம்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சென்றபோது நேரில் பார்த்தேன். ஜாதி, மதம் இல்லாத அரசியல் சட்டம்; வடமொழி தவிர்த்து, தமிழ்ப் பெயர் சூட்டல்; பெண்களுக்கான சமத்துவம்; அறிவியல் கருத்துப் பரப்பல்" என்று பெரியார் முன் வைத்த கருத்துகள் அங்கே செயல்வடிவம் பெற்றிருந்ததை சுட்டிக் காட்டினார்.

சுப்புலட்சுமி ஜெகதீசன் தனது உரையில், இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்க முடியாமல் போய் விட்டதே என்ற தனது கவலையைப் போக்கிட தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தமைக்காக தாம் மகிழ்ச்சி அடைந்ததாக குறிப்பிட்டார். விடுதலைப் போராட்டத்துக்காக நானும் எனது கணவரும் ஓராண்டு சிறைக்குச் செல்லும் வாய்ப்பையும் ஜெயலலிதா வழங்கி விட்டார். இங்கே பயிற்சி பெற்ற பல முன்னணி தளபதிகளுடன் பழகும் வாய்ப்புகள் எனக்கு கிடைத்தது. இந்த பயிற்சிக்காக பொது மக்களிடம் சென்று நன்கொடையாக போராளிகளுக்கு தேவையான பொருள்களை திரட்டியதையும் பெருமையுடன் நினைவு கூர்ந்தார்.

நிகழ்வில், 'ஈழத்தில் விருந்தோம்பல்' என்ற நிதர்சன் தயாரித்த இசைத் தகடும், தங்கமாறன் எழுதிய 'நெருப்பாற்றில் நீந்தியவர்கள்' என்ற புதினமும், தமிழ் இன்பனின் 'போராளியின் இரவுகள்' என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டன. சுப்புலட்சுமி ஜெகதீசன், நூல்களையும் இசைத் தகட்டையும் தானே முன்னின்று விற்பனை செய்தார்.

கழக மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்.

அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

– **நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 02nd December 2016

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN